செ.வெ.எண்: 19 /2021 நாள்: 07.08.2021

# நுண்ணீர் பாசனத்திட்டம் சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!

திருப்பூர் மாவட்டத்தில் குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட உதவிடும் பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டம் (ஒரு துளி நீரில் அதிக விளைச்சல்) வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு நூறு சதவீதம் மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் கணினி சிட்டா, அடங்கல், நிலவரைபடம் (FMB), தண்ணீர் மற்றும் மண் மாதிரி முடிவுகள், சிறு குறு விவசாயி சான்று ஆகிய ஆவணங்களுடன் வேளாண்மை அல்லது தோட்டக்கலைத் துறைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்படி இத்திட்டத்தில இணைந்து பயன்பெற விவசாயிகள் சிறு குறு விவசாயி சான்று, சிட்டா, அடங்கல், நிலவரைபடம் ஆகிய ஆவணங்கள் துரிதமாக பெறும் வகையில் நுண்ணீர் பாசனத்திட்ட சிறப்பு முகாம்கள், திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற உரிய ஏற்காடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவினாசி வட்டாரத்தில் வருகின்ற 10 மற்றும் 12ஆம் தேதிகளில் அவினாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், பல்லடம், பொங்கலூர், திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி வட்டாரங்களில் வருகின்ற 10 மற்றும் 12ஆம் தேதிகளில் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களிலும் சிறப்பு முகாமகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தாராபுரம், வெள்ளக்கோவில் வட்டாரங்களில் வருகின்ற 11 மற்றும் 13ஆம் தேதிகளில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், குடிமங்கலம், குண்டடம், மடத்துக்குளம், மூலனூர் மற்றும உடுமலை வட்டாரங்களில் வருகின்ற 11 மற்றும் 13ஆம் தேதிகளில் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் இந்த முகாமில சிறு குறு விவசாயி சான்று, சிட்டா, அடங்கல் மற்றம் நிலவரைபடம் தேவைப்படம் விவசாயிகள விண்ணப்பித்து தங்களுக்கு தேவையான ஆவணங்களை பெற்று கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், கூடுதல் விபரங்களுக்கு கீழ்கண்ட தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளமாறு கொள்ளப்படுகிறது.

| வட்டாரம் | அலைப்பேசி எண் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| அவிநாசி | 9843774567 | adaavinashi@gmail.com |
| தாராபுரம் | 9442434863 | agridpm2013@gmail.com |
| குடிமங்கலம் | 9965513265 | adagudimangalam@gmail.com |
| காங்கயம் | 9443475398 | agrikgm2020@gmail.com |
| **வட்டாரம்** | **அலைப்பேசி எண்** | **மின்னஞ்சல் முகவரி** |
| குண்டடம் | 9894028768 | kundadamada@gmail.com |

| | | |
|---|---|---|
| மடத்துக்குளம் | 9443714513 | adamdkm2020@gmail.com |
| மூலனூர் | 9486412102 | adamulanur20@gmail.com |
| பல்லடம் | 9442844942 | adaagripdm@gmail.com |
| பொங்கலூர் | 6383384167 | adapongalur@gmail.com |
| திருப்பூர் | 9843774567 | adagri.tup@gmail.com |
| உடுமலை | 9944557552 | ada.udt2019@gmail.com |
| ஊத்துக்குளி | 9344911511 | adauth2019@gmail.com |
| வெள்ளகோவில் | 9865132354 | adavellakovil@gmail.com |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**